14-1-73

# ஆத்மஜோதி



இராஜாஜி

பரிதாபி ௵ மார்கழி - தை ௴ 1973.





ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. — சுத்தானந்த

ஜோதி-25 பரிதாபி ஙு மார்கழி - தை மீ 1ம் உ [14-1-73] சுடர் - 2-3

## பொருளடக்கம்


| | |
|---|---|
| இராஜாஜி வாழ்க | — 33 |
| இராஜாஜியின் உவமைகள் | — 34 |
| ஒளிபெற்ற உத்தமர் | — 35 |
| இராஜாஜி பொன்மொழிகள் | — 39 |
| நவீன வீஷ்ம பிதா மகரின் மறைவு | — 41 |
| ஸ்ரீ காயத்ரீ உபாசனே | — 51 |
| வைதிக சைவக்கிரியா ரஸாமிர்தம் | — 54 |
| பரஞானத்தின் பேறு | — 57 |
| என் கடன் பணி! | — 59 |
| கலியுக வாழ்க்கை | — 63 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353


# இராஜாஜி வாழ்க!

(இராஜாஜி வங்காளக் கவர்னராக இருந்தகாலத்தில்
கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களால்
பாடப்பெற்றவை.)

அன்னை யடிமை நிலைபோக்கி
அறப்போர் வெற்றித் தளபதியாய்
மன்னுங் காந்தி யடிகளுக்கு
வலக்கை யாக நின்றுதவி
சென்னை மக்கள் புகழ்வளர்த்த
செல்வா ராஜ கோபாலா!
இன்னும் பல்லாண் டிவ்வுலகில்
இனிது வாழ்க வாழ்கவே!

இனிய கனிகள் கையிலெடுத்து
எளியேன் இருக்கும் இடந்தேடி
கனியும் அன்பால் வந்துள்ளம்
கனியச் செய்த கனவானே!
புனித ஞானி என்றுலகம்
புகழும் ராஜ கோபாலா
நனிஎம் பெருமான் அருளால்எந்
நாளும் வாழ்க! வாழ்கவே!

எங்கும் மக்கள் இடரின்றி
இன்பந் துய்க்கும் வழிகண்டு
கங்குல் பகல்எக் கணமுந்தான்
கடமை யாற்றும் அருளாளா!
வங்க நாடு போற்றிநிதம்
மகிழும் ராஜ கோபாலா
சங்க பாணி திருவருளால்
தழைத்து வாழ்க! வாழ்கவே!



# இராஜாஜியின் உவமைகள்

## மாதுளை முத்து

மாதுளம் பழத்தை உடைத்தால் அதில் அநேக முத்துக்களைக் காணலாம். ஒரு முத்து இருந்த இடத்தில் வேறு ஒரு முத்தைப் பதித்தால் பொருந்தாது. மனித இருதயமும் மாதுளம்பழம் போன்றதுதான். நம்முடைய இதயத்தில் ஒருவருக்கு இடம் கொடுத்து விட்டால் அதை மாற்றி மற்றொருவருக்கு இடம் கொடுப்பது சாத்தியமல்ல!

## காந்தி கடிகாரம்

கடிகாரம் சரியாக ஓடுவதற்காக நாம் அவ்வப்போது சாவி கொடுப்பதைப்போல், உலகம் நன்றாய் நடைபெறுவதற்காக பகவான் அவ்வப்போது உலகத்தில் அவதாரம் எடுக்கிறார். காந்தி மகாத்மா அத்தகைய அவதார புருஷரே!

## இரு கரைகளும் வேண்டும்

ஆற்றில் பிரவாகம் எடுத்து ஓடும்போது எந்தக் கரை உடைந்தாலும் ஆபத்துத்தான். முதலாளியும் தொழிலாளியும் ஆற்றின் இரு கரைகளைப் போன்றவர்கள். இருவரில் யார் முறித்துக் கொண்டாலும் தேசத்திற்கு நன்மை ஏற்படாது!

## காந்தி என்னும் மலர்

காந்திஜீ மறைந்து விட்டார் என்பதை உணருவதே நமக்குக் கஷ்டமாக இருக்கிறது மிகவும் சிறந்த அழகான பூ ஒன்று நம்முடைய தேசத்திலே மலர்ந்தது. அது வாடிப் போய் விட்டது. நாம் அதை எரித்து அதன் சாம்பலைக் கங்கையில் கரைத்து விட்டோம்!

அந்த மலர் இனி இல்லாவிட்டாலும் அதிலிருந்த அத்தர் நமக்குக் கிடைத்திருக்கிறது. காந்திஜீ நமக்குக் கற்றுக் கொடுத்த சத்தியமும் அன்புந்தான் அந்த அத்தர்!

புஷ்பத்துடன் அத்தரையும் நாம் கங்கையில் கொட்டி விடலாமா? கூடாது! அத்தரைப் பத்திரமாக வைத்திருப்போம். காந்தி மகானுடைய உத்தம போதனைகளைப் பக்தி சிரத்தையுடன் நம்முடைய இதயங்களிலே வைத்துப் போற்றுவோம்!

# ஒளிபெற்ற உத்தமர்!

(ஆசிரியர்)

1927ஆம் ஆண்டு மகாத்மாகாந்தி அடிகள் இலங்கைக்கு வந்திருந்தார்கள். மகாத்மாவைப் பார்க்க யாழ்ப்பாணம் முற்றவெளியில் என்றுமே காணுத பெருங்கூட்டம். காந்தி அடிகள் பேச எழுந்த போது அவரது பேச்சை மொழி பெயர்க்க வழக்கறிஞர் இளையதம்பி அவர்கள் எழுந்து நின்ருர்கள். அந்தக் காலத்தில் சிறந்த மொழிபெயர்ப்பாள ராக யாழ்ப்பாண மக்களால் கணிக்கப்பட்டவர்கள் திரு. இளையதம்பி அவர்கள்.

திரு. இளையதம்பி அவர்களுடைய மொழி பெயர்ப்பு மகாத்மாவின் உள்ளத்தைக் கவரவில்லை. முகத்தில் ஒரு மாறுபாடு ஏற்பட்டது. பத்து நிமிடப் பேச்சின் பின் மகாத்மா அவர்கள் இளையதம்பி அவர்களைக் கையமர்த்தி இனி என்னோடு கூட வந்த ஒருவர் மொழி பெயர்ப்பார் எனக் கூறிஞர்கள். மெலிந்த ஒல்லியான தேகம், தலையில் பத்து மயிர்கள் கொண்ட உச்சிக்குடுமி. தோளில் ஒரு துவாய், தாறு பாய்ச்சிய உடை. இந்த இலட்சணங்களுடன் ஒரு உருவம் எழுந்து நின்றது.

காந்தியின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. மொழி பெயர்ப்பாளரின் வாயிலிருந்து கணீரென்ற குரலில் தமிழ் வார்த்தைகள் தட்டின்றி பாய்ந்து வந்தன. சபையில் ஒரே சலசலப்பு. இவர் யார்? என்பதை அறிந்து கொள்ள மக்கள் உள்ளம் துடித்தது. மகாத்மா சலசலப்பின் காரணத்தைப் புரிந்து கொண்டார்கள். பேச்சோடு பேச்சாக மகாத்மா வே இராஜாஜி அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். சபை ஆரவாரித்துக் கரகோஷம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

1946ஆம் ஆண்டு கற்றன் மாநகரில் நடைபெற்ற இ. தொ. கா. மகாநாட்டிற்கு விசேட விருந்தினராக இராஜாஜி அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அண்ணுமலேச் செட்டியார் அவர்களுக்குச் சொந்தமாய் இருந்த ரொசல்லேயைச் சேர்ந்த வூட்ஸ்ரொக் தோட்டத்தில் உள்ள பெரியபங்களாவில் இராஜாஜி அவர்கள் தங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அச்சமயத்தில் தோட்ட மேற்பார்வையாளராக இருந்த மாணிக்கம் செட்டியார் அவர்கள் எனது ஆத்மீக நண்பர் ஆவர். அவரது தொடர்பினுல் இராஜாஜி அவர்களை அங்கு வைத்துத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அத்தருணம் இ. தொ. காவின் முக்கியஸ்தர்களான திருவாளர்கள் தொண்டமான், அசீஸ், இராசலிங்கம், குமாரவேல், சுப்பையா, நாயர், மேத்தா, பெரிசுந்தரம் போன்றவர்களும் சமுகம் அளித்திருந்தனர். இ. தொ காவின் வளர்ச்சிக்காக இராஜாஜி அவர்கள் அளித்த ஆலோசனைகள் இன்றும் எனது காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

மகாத்மாவின் இலங்கை விஜயத்தின் போது நாவலப்பிட்டியிலும் மகாத்மா ஒரு நாள் தங்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆத்மஜோதியின் கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா அவர்கள் தங்கியிருந்த புகையிரதப் பகுதி பங்களா ஒன்றில் காந்தி அடிகள் தங்கியிருந்தார்கள். இராஜாஜி அவர்களும் நாவலப்பிட்டியில் தங்கும் பாக்கியம் நாவலப்பிட்டிக்குக் கிடைத்தது.

கற்றன் மகாநாடு முடிந்து கண்டிக்குத் திரும்பும் வழியில் நாவலப்பிட்டி மைதானத்தில் இராஜாஜி அவர்களுக்கு நாவலப்பிட்டி பிரமுகர்கள் மகத்தான வரவேற்பு ஒன்று அளித்தார்கள். இராஜாஜி அவர்கள் அரைமணித்தியால நேரமேதான் தங்கியிருந்தாலும் அவரது இனிய உபதேசங்கள் ஆயிரக்கணக்கான மக்களைப் பரவசப்படுத்தின. காந்திய வழியில் உங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டு இந்நாட்டுக் குடிமக்களாக நீங்கள் வாழ வேண்டும் என்று அறிவுரை கூறினுர்கள். பாட்டாளி மக்களின்

உழைப்பே மலையகத்தின் அழகாகத் திரண்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள்.

இராஜாஜி அவர்கள் இருமுறை நாவலப்பிட்டி மண்ணில் மிதித்து நாவலப்பிட்டியைப் புனிதப்படுத்தி உள்ளார்கள். ஆதலினால் நாவலப்பிட்டியிலிருந்து வெளியாகும் ஆத்மஜோதி இராஜாஜி அவர்களுடைய திருவுருவப்படத்தை ஆத்மஜோதி முன்பக்கத்தில் வெளியிடுவதன்மூலம் தனது நன்றிக் கடனையும் செலுத்திக் கொள்கின்றது.

இராஜாஜி அவர்கள் உலக அரசியல் அரங்கிலே அரசியல் சாணக்கியர் என்று பாராட்டப்பெற்றவர்கள். அவர் கூறிய தீர்க்கதரிசனங்களை மற்றைய அரசியல் தலைவர்களால் 3, 4 ஆண்டுகளின் பின்தான் புரிந்து கொள்ள முடிந்தது. பாகிஸ்தான் பிரிவினையை இராஜாஜி ஒப்புக்கொண்டு சரியாக நான்கு ஆண்டுகளுக்குப் பின்புதான் மகாத்மாகாந்தியால் ஏற்றுக்கொள்ள முடிந்தது.

சர்வதேச அரசியல் அரங்கிலே போட்டியும், பொறாமையும், துவேஷமும், ஊழலும், வன்முறையும் மலிந்து சாம்பிக் கிடக்கின்றன. இத்தகைய சூழலிலே தரும வழி நின்று உலகத்திற்கு வழிகாட்டியாக இருந்த கலங்கரை விளக்கம் **1972ஆம் ஆண்டு நத்தார் தினத்தன்று அணைந்துவிட்டது.** இயேசுவாகிய பாலன் பிறந்த தினத்தைக் கொண்டாட உலக மக்கள் மகிழ்வுற்றிருந்த இந்த வேளையில் இராஜாஜி அவர்களுடைய பிரிவு உலகத்திற்கே ஒரு துர்ச்சகுனமாய் அமைந்து விட்டது.

மாந்தருள் மாணிக்கமாக மகாத்மாவைப் போற்றினார்கள். ரிஷிகளுக்குள் வியாசராக விளங்கியவர் இராஜாஜி அவர்கள். மகாபாரதத்தைப் பலர் எழுதியுள்ளார்கள்; பாடி உள்ளார்கள்; பிரசங்கித்துள்ளார்கள். இராஜாஜி எழுதிய வியாசர் விருந்தைப் படித்து அதனால் பேறு பெற்றவர்களின் தொகை மிக மிக அதிகம் என்றே கூறவேண்டும். இலட்சக் கணக்கான பிரதிகள் தமிழ் நாட்டிலே விற்பனையாகி

தனக்கென ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்ட பெருமை இராஜாஜி அவர்களால் எழுதப்பட்ட வியாசர் விருந்திற் குரியதாகும்.

அரசியலுக்கும் ஆத்மீகத்திற்கும் வெகுதூரம் என்று கருதும் மக்கள் வாழும் இக்காலத்திலே ஆத்மீக வாழ்வு தான் அரசியலுக்கு வழிகாட்டி என்று தானே வாழ்ந்து காட்டிய பெருமை இராஜாஜி ஒருவருக்கேதான் உண்டு.

தமது உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை இலகுவான உவமை மூலம் கேட்போர் மனதில் பதியவைக்கும் திறமையில் இராஜாஜிக்கு இராஜாஜியேதான் நிகராவார். இந்தியா சுதந்திரம் பெற்ற போது சமஸ்தானங்கள் குட்டி ராச்சியங்களாகப் பிரிந்து செல்லத் தலைப்பட்டன. ஹைதராபாத் தனிச்சுதந்திர பாத்தியதை கொண்டாடியது. அத்தருணத்தில் தலைவர்களையே அப்பிரச்சினை திணற வைத்தது. இது விஷயமாக இராஜாஜி ஓர் உவமையைக் கூறிவிளக்கினார். ''ஒரு மைனர்ப் பையனுடைய தகப்பனார் இறந்துபோய் விடுகிறார். அதனால் மைனர்ப் பையன் மேஜராகி விடுவானா? தகப்பனார் இருந்தாலும் இறந்தாலும் மைனர்ப் பையனே மைனர்ப் பையன்தான்'' என்றார். சந்தேகமே உருவெடுத்த மனிதர்களுக்குக்கூடச் சந்தேகம் தீர்ந்து விட்டது.

பெரிய சிக்கலான விஷயங்களையும் சிறிய எளிய உவமை மூலம் விளக்கிய பெருமை நமது காலத்திலே இராஜாஜி ஒருவருக்குத்தான் உண்டு. நமது காலத்திற்கு முன்பு வாழ்ந்த இராமகிருஷ்ணபரமகம்சதேவர், யேசுநாதர், திருவள்ளுவர் ஆகியோர் அரிய பெரிய உண்மைகளை எளிய உவமைகளின் மூலம் யாருக்கும் விளங்கும்படி செய்தார்கள். இந்த மகான்களுடைய பரம்பரையிலே தோன்றி நம் காலத்திலே வாழ்ந்தவர் இராஜாஜி அவர்கள். அவருடைய உள்ளத்தில் உண்மை ஒளி குடி கொண்டிருந்தது. ஆகையினால்தான் அவர் வாக்கிலே வந்ததெல்லாம் தெளிவின் வடிவாக வந்தன.

''உள்ளத்திலே உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்ற பாரதியாரின் வாக்கிற்கு இலக்கிய புருஷராக வாழ்ந்தவர்கள் இராஜாஜி அவர்கள்.

# இராஜாஜி பொன்மொழிகள்

## அடக்கம்

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் போனபடி விட்டுவிடாமல் பேச்சிலும் காரியத்திலும், அடக்கம் இருக்க வேண்டும். எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும் அடக்கம் இல்லாவிடின் பண்பாடென்பது இல்லை.

## அறம்

தர்மம் இல்லாத எந்தத் தேசமும் உருப்படாது. இது கர்நாடகக் கொள்கையாக இருக்கலாம். உடலில் இரத்தம் பழமையானதுதான்; இரத்த ஓட்டம் இல்லாவிட்டால் உடலில் உயிர் நில்லாது. அதைப்போல தருமம் இல்லாத நாடு செழிக்காது.

தர்மத்தைக் காக்க தைரியம் வேண்டும்: தைரியத்தை இழந்தோமானால் மனைவி மக்களையும் காக்க முடியாது. தர்மத்தைக் காக்க அதைவிடவும் தைரியம் வேண்டும். அச்சத்தை அகற்றி அனைத்திலும் விலையுயர்ந்த பொருளாகிய தருமத்தைக் காப்போமாக.

## இசை

மனிதனின் குரலில் தோன்றும் சங்கிதம் பூரணத்தன்மை அடைவதற்கு, கருத்தும் மொழியும் ராகமும் தாளமும் வேண்டும். நான்கும் ஒன்றில் ஒன்று சரியாகப் பொருந்தி ஒன்றையொன்று பூரணப் படுத்தி நிற்க வேண்டும்.

## இலக்கியம்

வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடி சிந்திப்பதுதான் இலக்கிய முறை

## இறைவன்

கல்வியும் அறிவும் நம்மைக் காப்பாற்ற மாட்டா. கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

இறைவனுக்கும் அவனின்று பிரிந்து உண்டான பொருள்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தே வருகிறது. அதுவே இறைப்பற்று; தெய்வ

பக்தி. அந்த இயற்கை வேகத்தைப் புறக்கணித்தோமானால் மனோ வியாதிகள் வந்து சேரும்.

## கல்வி

கல்வி வேறு படிப்பு வேறு. கல்வியானது புத்தி. ஆத்மா சிறப் புப் பெற சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டும் அதைத் தந்து விடாது தண்ணீர் மட்டும் ஆகாரமாகிவிடாது. ஆனா லும் அவசியமானதுதான். ஆனாலும் அதைவிடவும் உணவு முக்கியமா னது. அதைப்போலவே எழுதப்படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது.

## கலை

கலையில் உண்மை இருக்கவேண்டும். உண்மையின்றிக் கலையில்லை. ஆனால் உண்மையெல்லாம் கலையாகிவிடாது. நிகழ்ச்சிகளையும் சம்பாஷ ணைகளையும் பதிவுசெய்துவிட்டால் இலக்கியமாகிவிடாது. எது கலைக்கு உதவும் என்பதைக்கண்டு அதைத்தனிப்படுத்தி இலக்கிய உருவத்தைத் தந்தால்தான் அது கலையாகும்.

புது சிருஷ்டிகள் காணாத ஒரு தேசத்தின் கலையுணர்ச்சியே நாளடை வில் செத்துப்போகும்.

மனிதர்களுக்காகக் கலையே ஒழிய நிபுணர்களுக்காகவும் கலைக்காக வும் மனிதர்கள் இருப்பதாக எண்ணி, பழையதே சரி, புதியனவெல் லாம் மட்டம் என்று தீர்மானித்துவிடக்கூடாது.


## காதல்

காதல் என்பது ஓர் உண்மையான வேகமே. சில சமயம் இரு பக்க மும் காதலுண்டாகி விவாகமும் முடிவு பெறுகிறது. சில சமயம் இரு பக்கமும் காதல் இல்லைத்தான். அதனாலேயே வாழ்க்கை காதலற்றுப் போக வேண்டியதில்லை.

காதல் என்பது ஒரு ஜுரமன்று. பூவின் மணம்போல் அது ஓர் இயற்கை சக்தி. ஆறாத சக்தி. சில சமயம் அது தானாகப் பொங்கும்; இல்லாவிட்டால் மின்சார சக்தியைப்போல் நாம் உண்டாக்கி வளர்த்துக் கொள்ளலாம்.

காதலின் அழகு வறுமையில் அதிகமாகவே பிரகாசிக்கும். தைரி யமும் உண்மையான உள்ளக்கலப்பும் இருந்தால் வறுமையைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை.

# நவீன வீஷ்ம பிதா மகரின் மறைவு



XXXXXXXXXXXXXXX

க. இராமச்சந்திரா அவர்கள்

நவ பாரதத்தின் புதுயுக [illegible]வியான சுவாமி விவேகானந்தர் 1893-ம் ஆண்டில் சிக்காக்கோவில் நடைபெற்ற சர்வ மத மகாநாட்டில், வேதாந்த கர்ஜனை செய்து இந்து தர்மத்தின் பழமையையும் மகிமையையும் உலகறியச் செய்துவிட்டு, வெற்றி முரசொலிக்க தாய்நாடு திரும்பியபோது (1897-ம் ஆண்டு மாசி மாசத்தில்) சென்னையில் ஒன்பது தினங்கள் தங்கியிருந்தார். மயிலாப்பூரில் அவர் வசித்த மாளிகை ஓர் புண்ணிய க்ஷேத்திரமாக மாறிவிட்டது. அவர் முக தரிசனத்தைக் கோரி பல்லாயிரக் கணக்கான மக்கள் தினந்தோறும் குழுமினர். காலையிலும் மாலையிலும் மாணவர் கூட்டம் பெருகுவதுண்டு.

ஒருநாள் அவர் வீற்றிருந்த மண்டபத்தின் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த கிருஷ்ண படத்தை உற்று நோக்கிய வண்ணம் இருந்த சுவாமிகளின் கவனம் அவரைச் சுற்றி அமர்ந்திருந்த இளைஞர்கள்மீது சென்றது. அவர்களுட் பெரும்பாலோர் சென்னை சர்வகலாசாலையிலும் சட்டக் கல்லூரியிலும் படிக்கும் மாணவர்கள். அவர்களை நோக்கி, ''இளைஞர்களே! என்ன காரணத்திற்காக, கிருஷ்ண பரமாத்மா நீல நிறத்தவராகக் கருதப்படுகின்றார்?'' என்ற கேள்வியைப் போட்டார் சுவாமிகள். அவருடைய தொனியைக் கேட்டதும், மாணவர்கள் திகைத்துப் போய், சொல்வதின்னதென்றறியாது ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு விழித்தனர். பின் வரிசையில் இருந்த

இளைஞன், ஒருவன் எழும்பி, மெல்லிய குரலில், ''அகண்ட வஸ்துவின் நிறம் நீலம். ஆனபடியால் கிருஷ்ண பரமாத் மாவையும் அந்த நிறத்தில் பார்க்கின்றோம்'' என்று விடை கொடுத்தான். இளைஞனின் கூர்ந்த மதி சுவாமிஜி யின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. அவனை மேலும் பேச வைக்க விரும்பினார். ''நீல நிறம் அகண்ட வஸ்து வைக் குறிக்கிறதென்பதற்கு அத்தாட்சி சொல்லு பார்ப் போம்'' என்றார் சுவாமிஜி. பையன் விட்டுக் கொடுக்க வில்லை. ''பரந்து விரிந்த சமுத்திரம் நீல நிறமாய்த் தோன் றுகிறது; எல்லையற்ற ஆகாயம் நீல நிறமாய்க் காட்சியளிக் கிறது'' என்று கூறினான். உடனே சுவாமிஜி அந்த மாண வனை அருகில் வரும்படி அழைத்து, அவன் முதுகில் தட்டி அவனது மதிநுட்பத்தைப் பாராட்டி ஆசீர்வதித்தார். அந்த இளைஞன்தான் 1947-ம் ஆண்டு நவம்பர் 9-ந் தேதி காலை பத்து மணி வேளையில், புதுடில்லியில் மவுண்பேற் றன் பிரபுவின் இடத்தில் இந்தியாவின் கவர்னர் ஜென ரலாக (*Governor General*) நியமனம் பெற்ற ஸ்ரீ சக்கர வர்த்தி இராஜகோபாலாச்சாரியாராகும். இந்தப் பெரிய பதவிக்கு வந்த முதலாவது இந்தியன் அவரே. சுவாமிஜி யுடன் சம்பாஷணை நடத்தியபோது அவருக்கு வயது பதி னெட்டு. பதினேழாம் வயசில் சர்வகலாசாலையில் பீ. ஏ. (B. A.) பட்டம் பெற்று விட்டு, சட்டக் கல்லூரி மாணவ னாக இருந்தார் அப்போது.

ஸ்ரீ ராஜாஜி எந்தக் குலத்தில், எந்த ஊரில், எப்போது பிறந்தார், எங்கே படித்தார், என்ன உத்தியோகம் பார்த் தார், என்ன இலட்சியத்திற்காக அதைத் துறந்தார், என்ப வை போன்ற கேள்விகட்குப் பதில் கொடுப்பது இந்தக் கட் டுரையின் நோக்கமல்ல. இந்த விபரங்களை யெல்லாம் உல கம் இன்று நன்கறியும். மகாத்மாகாந்தியின் அஹிம்சாதர்ம இயக்கத்தில் ஈடுபட்டு பொதுவாக உலகிற்கும் முக்கியமாக இந்திய நாட்டிற்கும் அவர் செய்துள்ள அரும்பெரும் பணி யை யாம் சிந்தித்தால் போதுமானதாகும். 94ஆவது வய சில்அவரது பூதவுடல் மறைந்துவிட்டதென்பது உண்மையே.

இதனுல் அவரது புகழுடம்பும் அவர் நமக்கு விட்டுப் போன நூல்களில் அடங்கிய ஆத்ம சக்தியும் நீடூழிகாலம் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

தமது அந்தியகால சீவியத்தைக் குறித்து ராஜாஜி என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார் என்பதை யாம் சிறிது சிந்தித்துப் பார்ப்போம். சென்ற ஆண்டில் ஒரு நெருங்கிய அன்பருடன் பல விஷயங்களைப் பற்றிச் சம்பாஷிக்கும் போது சில அரிய வசனங்கள் அவர் வாயிலிருந்து வெளிவந்தன. அவற்றுள் சில பின் வருமாறு:-

''என் வாழ்வில் யான் பலவித சேவைகளில் ஈடுபட்டுள்ளேன். அரசியல், சமுதாயத்துறைகளில் செய்துள்ள பணியை யான் பிரமாதமாகக் கருதவில்லை. எங்கள் பழைய ரிஷிகளின் போதனைகளை முக்கியமாக மகாபாரதம் இராமாயணம் ஆகிய இரு நூல்களில் அடங்கிய அற்புத கருத்துக்களை எளிய நடையில், கதைமூலமாக தற்கால மக்கள் புரியக் கூடிய முறையில், ஆங்கிலத்திலும், தமிழிலும் வரைந்துள்ள தொண்டையே யான் மிகவும் உயர்ந்ததாகக் கருதுகிறேன்''

''ஆண்டவன் எனக்கு நீண்ட ஆயுளையும் தளர்ச்சியடையாத மனேசக்தியையும் அருளியதற்கு காரணம் இருக்கத்தானே வேண்டும். கடைசி மூச்சு இருக்கும்வரையில் என் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும், மாந்தர் ஏற்றுலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி, புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதே எனது விருப்பம்.''

''வாழ்க்கைச் சகடம் சத்தியம் தர்மம் ஆகிய இரு சக்கரத்தில் ஓட வேண்டிய ஒன்று. இரண்டில் ஒன்று பழுதடைந்தால், அல்லது இரண்டும் இணைந்து சுழலாவிட்டால் முன்னேறவே முடியாது. எவர் என்ன சொன்ன போதிலும் இறுதியில் சத்தியம் வெல்லும் என்ற அசைவற்ற நம்பிக்கையுடனேயே யான் இதுவரையில் பணிசெய்துள்ளேன்.''

1965ம் ஆண்டில் ஸ்ரீ வஸ்வானி மாமுனிவரின் 86-ம் வருட பூர்த்திவிழா பூனு நகரில் கொண்டாடப்பட்டது. அதற்கு ராஜாஜி ஓர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். இருவரும் ஒத்த வயசினர், ஒரே சமயத்தில் தங்கள் உத்தியோகங்களைத் துறந்து காந்திமகான் ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து சிறை சென்றவர்கள். மேலே குறிப்பிட்ட வாழ்த்துக் கடிதத்தில் ராஜாஜி பின்வருமாறு எழுதியுள்ளார்.

''காந்தியுடன் கூட்டுச்சேர்ந்த ஆரம்ப காலத்திலிருந்து ஸ்ரீ வஸ்வானியை எனக்கு நன்கு தெரியும். அவர் இப்பொழுது தமது பூவுலக வாழ்க்கையில் 87ஆவது வருடத்தை அணுகுகிருர். நானும் அப்படித்தான். ஆனல் வஸ்வானியின் இலட்சிய வாழ்க்கைக்கு நான் எவ்வளவு தொலைவிலிருக்கிறேன். கிருஷ்ணபிரானதும், மற்றும் தெய்வீக புனித மனிதர்களின் மத்தியிலும், அவர் ஆனந்தமாய் வாழ்கிருர். இதனல் நானே உலக விவகாரங்களைப் பொறுப்பேற்றிருக்கும் அகங்காரம் பிடித்த மனிதர்கள் மத்தியிலும், பிழையான நிர்வாகிகளிடையேயும் கிடந்து உழலுகிறேன்.''

சத்திய உள்ளம் படைத்த உத்தம மனிதன்தான் இத்தகைய புகழஞ்சலியை பிறிதோர் மகாத்மாவுக்குச் செலுத்த முடியும். இந்த வசனத்தைப் படித்துவிட்டு ஒருவர் மற்றொருவரிலும் பார்க்க உயர்ந்தவரென யாம் கருதக்கூடாது. இவ்விரு பெரியார்களும் அரிய கிருஷ்ண பக்தர்கள். கீதை இரண்டாம் அத்தியாயம் 71-ம் சுலோகம் விளக்கும் ஸ்திதப்பிரக்ஞ இலக்கணத்திற்குள் பொருந்த நிஷ்காமிய கர்மயோகத்தில் வாழ்வைக் கழித்தவர்கள். அதாவது, ஆசைகளை அறவே அகற்றி, பற்றற்று, நான் எனது என்னும் அகங்கார மமகாரமின்றி உலகில் நடமாடி உள்ளச் சாந்தியடைந்தவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸதேவரின் மணிவாக்குவாசகர்கட்குப் பூரண திருப்தியளிக்குமென நம்புகிறோம். அதுவருமாறு:-

''உடலிலிருந்து தலை வெட்டப்பட்ட பிறகு சிறிது நேரம் வரை உயிர் இருப்பதைக் காண்பிக்க ஆட்டில் உடல் அசைந்து கொண்டிருக்கிறது. அதுபோல பரிபூரண நிலையடைந்த ஞானியின் அகங்காரம் அழிவுண்ட போதிலும் சரீர சம்பந்தப்பட்ட அலுவல்களைச் சமாளிக்க அவ்வகங்காரத்தின் சக்தி கொஞ்சம் எஞ்சியிருக்கின்றது. இதனால் அவனைத் திரும்பவும் உலகத்தோடு இணைக்கக் கூடிய பலம் அதனிடம் இல்லை.''

ராஜாஜியின் வாழ்க்கையில் மிகவும் நெருக்கடியான, பெருஞ்சோதனைக்குரிய காலம் 1942-ம் ஆண்டெனலாம். மகாத்மா காந்தியையும் அவரது நெருங்கிய சகாக்களையும் விட்டுப் பிரிந்து அவர்களின் கொள்கைக்கும் தீர்மானங்கட்கும் எதிர்ப் பிரசாரம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. காங்கிரசு தப்பான வழியில் செல்வதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பது அவரது சுபாவமல்ல. எது சரியென்று அவர் கருதினாரோ அதனைச் சொல்லியே தீரவேண்டுமென்பது அவரது உன்னத இலட்சியம். 1942-ம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் 5-ந் தேதி பம்பாயில் மாதுங்காவிலுள்ள நாப்பு மண்டபத்தில் நடந்த கூட்டமொன்றில் அவரைப் பேசாது தடுக்க வன்முறையான ஏற்பாடுகள் இருந்தன. அவரது முகத்தின்மீது 'தார்க் குண்டு' வீசப்பட்டது. அவர் அணிந்திருந்த சுத்த வெள்ளைக் கதருடை முழுக் கறுப்பு நிறமாய் மாறிய பின்னரும் அவர் மேடையைவிட்டு அசையவில்லை. அவரது பேச்சுக்கு மூற்றிலும் எதிர்ப்புக் காட்டவென வந்து குழுமியிருந்த சனத்திரள் அமைதியாக இருந்து கேட்கக்கூடிய முறையில் தமது பேச்சை முடித்த பின்னரே மேடையை விட்டு இறங்கினார். இவ்வித எதிர்ப்பு அவருக்குப் புதிதல்ல. 1921-ம் ஆண்டில் திருச்சூரில் மொப்லா கலவரங் குறித்துப் பேசச் சென்றபோதும் சனங்கள் கல்வீசிப் பயமுறுத்தினர். அதற்கு அவர் அஞ்சவில்லை. தாம் சொல்ல வேண்டியதைச் சொன்ன பின்னரே அந்த இடத்தை விட்டுப் பிரிந்தார். ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்

சோம்'', ''அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை'' என்பவை போன்ற தமிழ் நாட்டு மெய்யடியார்களின் வீர மொழிகளில் பண்பட்ட அவர் உள்ளத்தில் ஆண்டவனுக்கும் அன்புக்கும், அமைதிக்கும் இடமிருந்ததேயன்றி அச்சத்திற்கு அணுவேனும் இடம் இருக்கவில்லை.

இச்சந்தர்ப்பத்தில், 1942-ம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் ஏழாந் தேதி மாலை வெள்ளவத்தையில் நடந்த ஓர் நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடாமல் விட முடியாது. எம்முடன் நேர்த் தொடர்புடைய ஒன்று அது. யோகிகளின் சித்தர்களின் திவ்விய திருஷ்டியும் அவர்களின் தீர்க்கதரிசன வாக்கும் எப்படிக் காலத்தையும் இடத்தையும் தாண்டி மிளிர்பவையென்ற பேருண்மையை இந்தச் சம்பவத்திலிருந்து நாம் நன்கு அறியலாம். அப்போது யான் வெள்ளவத்தை புகையிரத வீதியிலுள்ள ஓர் அன்பரின் இல்லத்தில் வசித்து வந்தேன். எனது குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் யுத்த காரணமாகத் தங்கியிருந்தார்கள். அன்பர் வசித்த வீடு ஓர் பெரிய மனை. அதில் போதிய இடவசதியிருந்தமையால் எனக்கு அதில் இடந்தந்து அவரும் அவர் குடும்பத்தினரும் ஆதரித்தனர். அக்குடும்பம் முழுவதும் ஸ்ரீ யோகர் சுவாமிகளிடம் அளவற்ற பக்தி பூண்டவர்கள். அத்தோடு என்னோடு கூடி ஸ்ரீ ரமணாச்சிரமத்திற்கும் ஆனந்தாச்சிரமத்திற்கும் யாத்திரை செய்து ஸ்ரீ ரமணமகரிஷிகளதும் ஸ்ரீ சுவாமி இராமதாசரதும் தரிசனத்தையும் ஆசியையும் பெற்றவர்கள். மேலே குறித்த ஏழாந்தேதி ஸ்ரீ யோகர் சுவாமிகள் அவர்கள் இல்லத்திற்கு எழுந்தருளியிருந்தார். யான் கந்தோர் வேலை முடிந்து வீடு திரும்பும் நேரம். அந்த இல்லத்தில்தான் யான் குடியிருப்பதை அவர் அறியார். என்னைத் தெருவில் கண்டதும் அன்பரின் புத்திரியைக் கூப்பிட்டு ''இராமர் அதோ போகிறார், ஆசாமியை இங்கே வரும்படி சொல்லு'' என்றார். பிள்ளை, ''அவர் இங்கேதான் வசிக்கிறார். வேலை முடிந்து இங்கே தான் திரும்புகிறார் இப்போ'' என்று பதில் கூறிவிட்டு, முன் முற்றத்துக்கு வந்து, ''சுவாமி வந்திருக்கிறார் மாமா!

உங்களை தன் முன் வரட்டுமாம்'' என்று என்னிடம் கூறிற்று. யான் மகிழ்ச்சியுடன் அவர்முன் சென்று கை கட்டி நின்றேன். எனது அன்பரும் மனைவியாரும் அதே விதம் நின்றார்கள். யான் கிட்டப் போனதும் சுவாமிகள் என் முகத்தை ஆத்திரத்துடன் பார்த்து, ''ஓய்! உம்முடைய காந்தியாருடன் தெய்வம் பேசுகிறது. எங்களைப் போன்றவர்களுடன் பசாசு பேசுகிறது. அப்படித்தானே காணும்'' என்று உரத்த குரலில் ஓர் கேள்வியைப் போட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போது மகாயோகி அரவிந்தர் மகாத்மா காந்திக்கு எழுதிய அந்தரங்கக் கடிதம் எவருக்குமே தெரியாது.

பத்திரிகைக் காரரே அறியாத பரம இரகசியமாக இருந்தது. அதுமாத்திரமின்றி, அகில இந்திய காங்கிரசின் கொமிற்றியின் கூட்டம் பம்பாயில் ஏழாந்திகதி கூடுவதும் இலங்கைக்கு எட்டியிராத புதினம். பின்னர், சுவாமிகள் அவருக்கு வழக்கமான பெரிய சிரிப்புடன் மறுபடியும் என்னை நோக்கி ''தெய்வம் பேசவில்லைக் காணும். காந்தியின் இரு பக்கத்தில் இருக்கும் அரசியல் அதிகார வெறிபிடித்த இரு மனிதர்கள்தான் அவருடன் இந்த நேரத்தில் பேசுகிறார்கள்'' என்று கூறிமுடித்தார். இந்த தீர்க்கதரிசன வாக்கில் அடங்கியிருந்த அற்புத உண்மை, சில வருஷங்கள் கழிந்தபின் அரவிந்தரின் ஆசியும் ஆலோசனையும் புறக்கணிக்கப்பட்டவிதம் சகல விபரங்களுடன் வெளிவந்தபின்னரே எம்போல்வார்க்கு விளங்கியது. இரு யோகிகளுக்கிடையேயுள்ள உள்ளறிவுத் தொடர்பையும் நாங்கள் உணரக்கூடியதாயிருந்தது. ராஜாஜி அரவிந்தர் கடிதம் கிடைக்குமுன்னரே காங்கிரஸ் நிர்வாகக் குழுவிலிருந்து விலகிவிட்டார். எனவே அவரும் உள்ளறிவுத் தொடர்பிலேயே தமது எதிர்ப் பிரசாரத்தை நடாத்தினரென்பதும் இத்தால் அறியக்கிடக்கின்றது. பின்னர், சுவாமிகள் இது விஷயங் குறித்து தனிமையில் சம்பாஷிக்குமாறு சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் ''விதி மதியையும் மயக்கிவிடும்'' என்று சுருக்கமாகக் கூறிவிடுவதுண்டு.

ராஜாஜிக்கும் எமக்குமிடையேயிருந்து வந்த அத்யாத்மத் தொடர்பு அவரின் அரை நூற்றாண்டுக்கு முன் வரையப்பட்ட ''கண்ணன் காட்டிய வழி'' ''உபநிடதப் பலகணி'' என்ற இரு சிறு நூல்கள் மூலம் ஆரம்பித்ததாகும். அந்தத் தொடர்பானது 1927-ம் ஆண்டு நவம்பர் மாசத்தில் அவரும் அவர் புத்திரியாரும் காந்தியாருடனும் கஸ்தூரிபாயுடனும் இலங்கைக்கு விஜயம் செய்தபோது மிகவும் நெருங்கிய உறவாக மாறியதாகும். அப்போதுதான் அவர்கள் எல்லோரையும் நாவலப்பிட்டியாவில் எங்கள் இல்லத்தில் விருந்தினர்களாக உபசரிக்கும் அரும் பெரும் பாக்கியம் எனக்கும் எனது பிரிய பாரியாருக்கும் கிடைத்ததாகும். அத் தொடர்பில் நடந்த ருசிகரமான சம்பவத்தையும் இக்கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன்.

மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயஞ் செய்யப்போகிறார், அப்போது ராஜாஜியே அவரது காரியதரிசியாகப் பணியாற்றியவர் என்ற செய்தியை சென்னைப் பத்திரிகைகளில் படித்ததும், ராஜாஜியுடன் கடிதத் தொடர்பை ஆரம்பித்தேன். மலைநாட்டில் செல்ல வேண்டிய இடங்களைப்பற்றி அவருக்கு நேரசூசிகையுடன் அறிவித்தேன். கண்டியிலிருந்து பதுளை வரைக்கும் போய்த் திரும்பும் அட்டவணை ஒன்றும் அனுப்பியிருந்தேன். இலங்கை வந்தபின் அவர்களைச் சந்தித்த சில பிரமுகர்கள் யான் முன்னரேயே கொடுத்த அட்டவணைக்கு முரண்பட்ட சில திட்டங்கள் போட்டனர். இறுதியில் ராஜாஜி தலவாக்கொல்லையிலிருந்து கம்பளை வரைக்கும் யான் கொடுத்த அட்டவணையையே அணுவேனும் மாற்றாமல் பின்பற்றினார். நாவலப்பிட்டியாவில் தங்கும் போது எங்கள் இல்லத்தில்தான் தங்க வேண்டுமென்பது நகரசபைத் தலைவரதும் வரவேற்புக்குழுவினரதும் தீர்மானமாகும். இதை ஏற்றுக்கொள்ள யான் தயங்கினேன். ஏனெனில், எங்கள் வீடு ஓர் குன்றின்மேலிருந்தது; நேரே மோட்டாரிலிருந்து வீட்டுக்குச் செல்ல முடியாது; சிறிது தூரம் கால்நடையாகப் படியேற வேண்டும். இந்தக் கஷ்டத்தை கோஷ்டியினர் இந்தியாவை விட்டுப்

புறப்படுமுன் கடிதமூலம் தெரிவித்திருந்தேன். பின்னர், அவர்களுடன் கட்டுகஸ்தோட்டையில் ஸ்ரீ நுகெவெல நிலமையின் மாளிகையில் தங்கியிருந்தபோது நேரிலும் எடுத்து விளக்கினேன். ''கால் நடையும் மலை ஏறுதலும் காந்தி யாருக்குப் புதிதல்லவே'' என ராஜாஜி சிரித்து மழுக்கி விட்டார். நாவலப்பிட்டிப் பிரயாணநாள் வந்தது. ஹற்றனிலிருந்து நாவலப்பிட்டியா வரைக்கும் சூரியப்பிரகாசத்துடன் வானம் நிர்மலமாய் இருந்தது. மோட்டார்கள் வந்து எங்கள் மலை அடிவாரத்தில் நின்றதுதான் தாமதம் சிறு மழை ஆரம்பித்து விட்டது. ராஜாஜியிடம் ஒரு குடையை விரித்துக் கொடுத்துவிட்டு, இன்னொரு விரித்த குடையுடன் காந்தியாரை அணுகினேன். என்னை அறியாமல் கலங்கிக் கண்ணீர்விடத்தொடங்கினேன். இதைக் கண்ணுற்ற மகாத்மா ராஜாஜியை நோக்கி ''ஏன் இந்த அன்பர் அழுகிறார்'' என்ற கேள்வியைப் போட்டார். ''காரணம் உங்களுக்கு உண்மையில் விளங்கவில்லைத்தானே?'' என்ற ஓர் சிறு அணுக்குண்டைப் போட்டுவிட்டு புன்சிரிப்புடன் ராஜாஜி ''அவர் வீட்டு வாசலுக்குப் போவதற்கு முன் நீங்கள் முழுகி விடப் போகிறீர்களே என்பதற்காகக் கண்ணீர் விடுகிறார். முன்னரேயே இதற்கு அஞ்சி இருந்தது தெரியுந்தானே!'' காந்திஜி என் முதுகில் தட்டிக்கொடுத்து, ''தென்னிந்தியாவை விட்டுப் புறப்படும்போது அங்கே மக்கள் மழைக்காக அழுவதைப் பார்த்தோம். இங்கே மழைபெய்கிறதென்று இவர் அழுகிறார். என்ன விநோதம் இது'' என்று பொக்கு வாயைத் திறந்து சிரித்தவண்ணம் நடையைத் தொடங்கினார். முன்னரேயே அந்தப் படிகளில் ஏறிப்பழகினவர் போல். நானும் சிரித்துக்கொண்டு பின் சென்றேன்.

இக்கட்டுரையை முடிக்கு முன், ராஜாஜியின் ஞான திருஸ்டியை நன்கு விளக்கும் பிறிதோர் சம்பவத்தையும் இங்கு விபரிக்க விரும்புகிறேன். அவர் கவர்னர் ஜெனரலாய் டில்லியில் வசிக்கும் போது, பகவான் ரமணமஹரிஷிகள் இளைஞனாய் திருவண்ணாமலைக் கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்தின் கீழ் அமைந்துள்ள பாதாள லிங்கத்தருகில்

பலநாள் ஊணும்உறக்கமும் இன்றி கடுந்தவஞ் செய்த சம்ப வத்தின் ஞாபகார்த்தமாக ஓர் கோபுரம் ரமண பக்தர் களினுல் அங்கே எழுப்பப்பட்டது; அதைத் திறந்து வைக்க ராஜாஜி வந்திருந்தார். சம்பவம் முடிந்ததும் அவர் புகை யிரத நிலையத்திற்குப் புறப்பட்டார். சென்னை பத்திரிகை நிருபர் ஒருவர் அவரை வழி மறித்து, ''ஐயா! இரண்டா யிரம் மைல் பிரயாணஞ் செய்து இங்கு வந்த நீங்கள் அருகில் இருக்கும் ஆச்சிரமம் சென்று மஹரிஷிகளைத் தரிசிக்காமல் திரும்பலாமா?'' என்ற கேள்வியைப் போட்டார். ''மஹ ரிஷிகள் திருவருள் அவர் அருகுசென்று தரிசிப்பவர்கள் மீதுதான் படுகின்றது. மற்றவர்கட்கு அவர் அருட்பிரவா கம் இல்லை யென்பது உங்கள் கருத்தா?'' என்ற கேள்வி யைப்போட்டுவிட்டு மோட்டாரில் ஏறிவிட்டார். பத்திரிகை நிருபர் வெட்கித் தலைகுனிந்து நடைகட்டினுர். சென்ற பல ஆண்டுகளாக உலகின் நலாபக்கங்களுக்குஞ் சென்று ஆங்காங்கு ரமண பக்தர்களின் நல்லுறவைப் பெற்ற எனக்கு ராஜாஜியின் கேள்வியில் அடங்கிய அருங்கருத்து இப்போ நல்லாய் விளங்குகிறது. அவர்களுட் பெரும்பா லார் இந்திய மண்ணையே தீண்டாதவர்கள் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேம்.

---

## அறிவு

இந்த உலகில் அழியாத பொருள் ஒன்றே ஒன்றுதான். அதை வெள்ளத்தால் அடித்துக்கொண்டுபோகமுடியாது. கனல் கக்கும் நெருப்பு சுட்டெரிக்க முடியாது. பிறரால் கவர்ந்து கொள்ள முடியாது. மனமுவந்து கொடுத்தாலும் குறையாது. கள்வனுல் திருட முடியாது. முட்டுக்கட்டை போட்டுத் தடுக்க முடியாது. இத்தனை சிறப்புக் கொண் டது என்ன? அறிவு!

கற்பூரத்தால் பாத்தி கட்டி, கஸ்தூரியை எருவாகப் போட்டு, பன்னீரைத் தண்ணீர் போல் ஊற்றினுலும், நடப்பட்ட வெங்காயம் விளையும் போது, அதன் காரம் மாறி வேறு ருசி தராது. அது போலவேதான் அறிவில்லாத வர்களுக்கு நல்லறிவு புகட்டுவதும்.

# ஸ்ரீ காயத்ரீ உபாசனை

(ஆர். கே. முருகேசு)

அன்னை பராசக்தியின் அருளைப் பெற்று, அமைதி, ஆனந்தம் நிறைந்த பெரு வாழ்வைப் பெற விரும்பும் பக்தர்களே!

பிறந்த உயிர்களனைத்தும் இறப்பது உறுதி. இறக்கத் தான் வேண்டுமானால் பிறப்பது ஏன்? இக்கேள்விக்கு விடையறிந்தவர்கள் பயனுடைய வாழ்க்கையில் வாழ்வார்கள். விடையறியாதோர் பிறந்த காரியத்தை விடுத்து, வேறு காரியத்தில் ஈடுபட்டு ''பிறந்தது வீண்'' என்றபடி வாழ்ந்து பயன் சிறிதுமின்றி மறைந்து போவார்கள். ''ஏன் பிறந்தோம், எதைச் செய்ய, எதைப்பெற பிறந்தோம்?'' என்ற கேள்விகளுக்கு அனுபவமான விடையை அறிந்து கொள்ளும் வழிகளை மறைந்து வாழும் மகரிஷிகள் மக்களுக்கு எடுத்தோதி வருகிறார்கள். இவர்களின் உபதேசவழி நின்ற பலர் தாம் பிறந்த குறிக்கோளை அறிந்து கொண்டு, அதைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுப் பெறவேண்டியதைப் பெறவும் செய்கிறார்கள்.

மண்ணுலக இன்பப் பொருள்கள் அனைத்தாலும் அனுபவிக்க முடியாத ''ஆநந்தம்'' எனும் ஓர் பேரின்ப அனுபவத்தைப் பெறவே பிறக்கிறோம். ஆனால் இதை மறந்து மண்ணுலகச் சிற்றின்பங்களிலேயே மதிமயங்கி நின்றுவிடுகிறோம். ஆநந்தானுபவத்தைப் பெற்றவர்கள் மண்ணுலக இன்பங்களில் மனதைப் பறிகொடுக்க மாட்டார்கள் வானுலக தேவரின்பங்களையனுபவித்தாயினும் அதைப் போதுமென ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மனிதன் முயற்சியால் பெற்றனுபவிக்கக் கூடிய அவ்வாநந்தானுபவத்தைத்

தேவர்களும் அறியார். தேவர்கள் அவ்வாநந்தத்தைப் பெற விரும்பினுல் மனிதனுகப் பிறந்தாக வேண்டும். ஏனென்ருல் தேவருலகம் போகபூமிமட்டும்தான். மண்ணுலகில் புண்ணிய கர்மாக்களைச் செய்பவர்கள் பிரதி பலனுக ஐம்பொறி இன்பங்களை துன்பமில்லாத நிலையில் அனுபவிப்பதற்கென அமைந்தவையே தேவருலகங்கள். மனிதன் முயற்சியால், சாதனையால் அனுபவிக்கக்கூடிய ஆநந்தத்தைப் பெறுவதற்கான சாதனைகளை தேவருலகில் காண முடியாது. ஆகவே, ஒருவகையில் நம் மண்ணுலகமும், நம் மானிடப் பிறவியும் தேவருலக, தெய்வப் பிறவிகளை விடச் சிறந்ததெனலாம். ஆனுல் இந்தச் சிறப்பையும், சீரையும் பிறவியின் லக்ஷியத்தை அறிந்து வாழும் மனிதனே பெறமுடியும். மற்றையோர் பெறமுடியாது.

மண்ணுலக மனிதன் அனுபவிக்கக் கூடிய ஆநந்தத்தைப் பற்றி ஓர் சிறு கதையுண்டு. நசிகேதன் என்பவன் ஒரு சமயம் தன் தந்தையால் எமனுக்குக் கொடுக்கப்பட்டான். எமன் அவனை மூன்று வரங்கள் கேட்கும்படி சொன்னுன். முதலிரண்டு வரங்களில் தன் தந்தையின் அன்பைப் பெற வேண்டுமென்றும், சுவர்க்க பிராப்திக்காக இரகசிய வேள்வியைத் தெரிய வேண்டுமென்றும் கேட்டபின், மூன்ருவது வரமாக ''இறந்து போபவன் பின்னும் இருப்பானு, இல்லையா?'' என்று கேட்டான். எமன் சொன்னுன். ''இது மரண இரகசியம் தேவர்களுக்கும் தெரியாது; உனக்கு நிறைய பொன், பொருள், பசுக்கள், யானைகள், குதிரைகள், உலகில் பெரிய நிலப்பரப்பு, நீண்ட ஆயுள், தேவமாதர்களின் பணி செய்யும் பெருமை இவைகளைத் தருகிறேன். மரண இரகசியத்தைக் கேட்காதே'' இதற்கு நசிகேதன் சொன்னுன், ''மனிதன் அனுபவிக்கக்கூடிய ஆநந்தத்தைப்பற்றித் தெரியாதவர்கள்தான் நீ சொல்லும் இன்பங்களை வேண்டுவார்கள். நான் அதைப்பற்றித் தெரிந்தவனுகையால் எனக்கு இந்த போக இன்பங்கள் வேண்டாம்.''

பக்தர்களே! இத்தகையது மனிதன் அனுபவிக்கக் கூடிய இன்பம். அதுவும் மனிதனுயிருந்து அனுபவிக்கக்

கூடிய பரிபூரண இன்பம். இந்த இன்பப் பாதையில் மாருத குறையாத, திகட்டாத பேரின்பப் பாதையில் மக்களை நடத்திச் செல்ல மகரிஷி கூட்டத்தைச் சேர்ந்த பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்; தட்டினவர்களுக்கு கதவு திறக்கப்படும், கேட்டவர்களுக்குக் கொடுக்கப்படும்.

அப்பேரின்ப அனுபவப் பாதையில் ஓர் படிதான் இறை வழிபாடு. இறைவழிபாட்டில் இறையை அன்னையாக வழிபடுவது சாலச் சிறந்தது. ஏனெனில் குழந்தைக்கு அப்பனை விட, அன்னைதான் அதிகமாய்ப் பட்சம் காட்டிப் பராமரிப்பாள். இறை நமக்கு அன்னையாயிருந்து, அருள்பொழிய, பிரத்தியக்ஷ தெய்வமாக செயல்படும் வடிவம்தான் ''ஸ்ரீ காயத்ரீ தேவி'' பற்பல வடிவங்களில் பராசக்தி இயங்கினாலும், நமக்கு நேர் தொடர்புடைய அவளின் வடிவம் காயத்ரீயே. ஏனெனில் காயத்ரீ, ''அதோ நாம் காணும் அச்சூரியனின் சக்திதான்!'' காயத்ரீ மந்திரத்தைச் செபிக்கும் தோறும், உபாசனையைச் செய்யும் தோறும், நம்மை சுற்றிலும், நம் உள்ளும், புறமும் பரவி நம் உடல், உயிர், மனங்களை இயக்கிக் கொண்டிருக்கும் காய்த்ரீ சக்தியாம் சூரிய சக்தியை நம்முள் அதிக அளவில் நாம் அலைக்கழியச் செய்கிறோம். உடனுக்குடன் இதனாலான பலனை நாமறிய அனுபவிக்க, உணர முடியாவிட்டாலும், தொடர்ந்து காயத்ரீ உபாசனையால். சாதனையால் நாம் நிச்சயமாய் இதன் பலனை நம் உடல், மன, பிராணங்களில் அனுபவிக்கவே செய்வோம். இவ்வளவு சிறப்பு வாய்ந்தது காயத்ரீ உபாசனை.

இத்தகைய சிறப்புமிக்க உபாசனையை பக்தி சிரத்தையுடன் செய்து, வேதங்களின் தாயாகிய ஆதிசக்தி அன்னை காயத்ரீயின் அருளைப்பெற்று; அப்பேரின்பானந்த அனுபவத்தை அனுபவித்து அமரத்துவம் அடைவோமாக.

ஓம் தத் சத்!

# "வைதிக சைவக்கிரியா ரஸாமிர்தம்"

(டாக்டர் கந்த - சாம்பசிவக்குருக்கள்)
நாயன்மார்கட்டு.

அகண்டாகார, அநாதி மலமுத்த நித்திய வியாபக சச்சிதானந்த சொரூப, சுத்த சாட்குண்ய பரிபூரண பரமகருணாநிதியாகிய பரமசிவன், இவ்வுலகின் கண் அநித்யமாம் மானுட சரீரம் பெற்று, ஆன்மாக்களின் பொருட்டு தாம் கொண்ட அளப்பரும் கருணையினால், பிரதம சிருஷ்டி காலத்தில் பசுபதியாகிய பரமசிவனார் உட்சுவாச நிச்சுவாசக் காற்று அபின்ன சக்தியாகிய பராசக்தி குடிலையை நோக்கிய போது, அதினின்று வேத சிவாகமங்கள், நாதபிந்து வடிவாயும், அதன்பின் அக்ஷரவடிவாயும் தோற்றின வென்று இருக்கு வேதமே கூறும். இவற்றைப் பின் சொற்களால் இறைத்து பிரம்மதேவருக்கு உபதேசிக்கத் திருவுளங்கொண்டு சாதாக்கிய தத்துவத்திலே சதாசிவ மூர்த்தியாய் எழுந்தருளியிருந்து,

தமது திக்கு நோக்கிய நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும், ஊர்த்துவ முகத்தால் ஆகமங்களையும் அருளிச் செய்தார் என ஆகமங்களே கூறும். பிரபஞ்சம் யாவும் நாதவடிவினதாகிய ஓசையிலிருந்து பிறந்ததென்பதே சமய சாஸ்திரம். இந்த ஓசை யிருதிறப்படும். ஒன்று எழுத்தோசை, மற்றது இசை ஓசை. இவற்றுள் எழுத்தோசையானது பிந்து காரணமாகத் தோன்றுவது. இசை ஓசையானது ஆகாயங்காரணமாகத் தோன்றுவது. (எழுத்தோசையை வர்ணாத்மக சப்தம்) என்றும், தொனி — இசை ஓசையைத் (தொனியாத்ம சப்தம்) என்றும், வடநூல் கூறும். எழுத்தோசையை — வயிந்தவ ஓசை யென்றும், இசை ஓசையை- பௌதிக ஓசை யென்றும் ஆகமங்கள் விளக்கும்.

ஆகவே, (அக்ஷர) எழுத்தோசையாகிய வயிந்தவ ஓசையின் தோற்றம், இசை ஓசையாகிய பௌதிக ஓசையின் தோற்றத்திற்கு முற்பட்டதென்பது துணிபு.

சத்தப் பிரபஞ்சமாகிய நாத தத்துவமே முதற்கண் தோன்றி அதனிலிருந்தே ஏனைய தத்துவங்களாகிய அர்த்தப் பிரபஞ்சமெல்லாம் தோற்றின. ஆண்டவனாகிய பசுபதி ஆன்மாக்களாகிய எம்மை முதலில் சிருஷ்டிக்கும் பொழுது எமக்குப் பேசுந் திறமையைத் தந்தே படைத்தார். மனிதர்களுக்கு பேசுந்திறனுக்கமைந்த கருவியாகிய பாஷையையும் தந்தார்! பாஷையின்றி பேசுந்திறமை ஏற்படாது. சுவாசிக்கும் தன்மையை சகல சீவராசிகளுக்கும் கொடுத்தார் என்றால் இத்தன்மையைக் கொடுக்கு முன்பே காற்றை உண்டுபண்ணினார் என்பது தடையின்றிப்புலனாகும்!

''மேலும் நினைக்கும் தன்மையுள்ளவன் நினைத்ததைப் பாஷையால் வெளியே சொல்பவன் மனிதன் ஒருவனே'' மனித சிருஷ்டிக்கு முன்பே பாஷையைச் சிருஷ்டித்தார் என்பதும் புலனாகிறது. தேவர்களையே முதற்கண் சிருஷ்டித்தார். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாஷை சமஸ்கிருதம். இதுவே தேவபாஷை. ஆகமங்களிலே விரிந்து கிடக்கும் கொள்கைகள் நான்கு பாதங்களை உடைய அனேக கோடி கிரந்தங்களையுடையனவாய் விஸ்தாரமாக உள்ளன.

அதனுள் கிரியாபாதத்தில் கர்ஷிணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் முதலிய கிரியைகள் கூறப்படுகின்றன. ஆன்மார்த்த பரார்த்த பூஜை முறைகளையும் கூறுகின்றன. பூஜை என்றால், என்ன என்பதைக் காரணாகமம் கூறுமாறு காண்க.

"பூர்ய ந்தே சர்வ கர்மாணி ஜாயதெ
ஞாந மாத்மநி''

சர்வகர்மாக்களைப் பூர்த்தி செய்வதாலும், ஞானத்தை அளிப்பதாலும் பூஜையெனப் பெயர் பெற்றது.

ஆன்மாக்களுக்கு இடர்களைந்து இம்மைக்கும் மறுமைக்கும் பயன் நல்குவது, சிவ பூஜையாகும். இச் சிவ பூஜை ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என இருவகைப்படும். ஆன்மார்த்த பூஜையோ வெனில், நான்கு வருணத்தாரும் சமயம், விசேஷம் முதலியசிவதீக்ஷைபெற்று, குருவால் அளிக்கப்பட்ட ஆன்மார்த்த இலிங்கத்திற்கு வழுவாது பூஜை புரிதலாம்.

ஆலயங்களில் சுவாயம்புவம் முதல் பாணன்வரை, எழு வகை தோற்றத்தோடு காட்சியளிக்கும் பரமசிவனை, முறைப்படி வழிவழி அடிமைத்திறன் ஆண்ட ஆதி சைவர்களாகிய வேதியர்களைக் கொண்டு, பூசை செய்வித்தல் பரார்த்த பூஜை எனப்படும். மேலும் பதினெட்டு சிவாசாரியர்கள் பத்ததி வரிசை கூறிப் போந்தார்கள். அவர்களுள் ஸ்ரீ அகோர சிவாசாரியாருடைய பத்ததியே சகல வைதிக சைவாசாரியார்களாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறபடியால் அதை அடியேனும் பின்பற்றி ''வைதிக சைவக் கிரியா ரஸாம்ருதம்'' என்ற தலையங்கத்தில் நித்தியம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகையிலடங்கும். நித்திய பூஜை — இருவகைப்படும். நித்திய பூஜை — 'ஆகந்துக' நித்திய பூஜை எனப்படும் தினம் செய்யப்படும் பூஜை. நித்திய (பூஜை) என்றும். பிரதோஷம், அட்டமி, அமாவாசை, விஷுபுண்யகால பூஜைகள் ஆகந்துக. (நித்தியம்) என்றும் கூறப்படும்.

இவைகளின் 'கிரியா ரஸாம்ருத'த்தை, வைதிக சைவமும், தெய்வத் தமிழும் நிலைபெற, திருவுளங்கொண்டு வெளியிடத் திருவுளம் பற்றினேன். கிரியையை அறியாதவர்கள் அறிந்து பொருள் விளங்கிப் பயன்பெறுவார்களாக!

''கிரியை அடுத்த இதழில் வளரும்''

சுபம்!

## சற்குரு வணக்கம்

### நேரிசை வெண்பா

அழியா அவித்தை அழிந்தொழிய ஞான
விழியா லெரிக்கும் விமலன் — மொழியதனை
நெஞ்சே நினைந்துருக நீங்காக் குருபரன்றன்
கஞ்சமலர்த் தாளே கதி.

# பரஞானத்தின் பேறு

சோதிடமும் வைத்தியமுஞ் சொல்லுமிகு மந்திரமும்
பேதிக்குஞ் சன்னதமும் பேயாட்டும் — ஆதியருள்
ஞானமென நம்புதல் தப்பாகும் நம்பாமல்
ஊனமெனக் காண்போம் உணர்ந்து. 1

ஊனமிகு ஆவி யுலகின் கதைதன்னை
ஞானமென நம்பிவிடல் நாசங்காண் — ஞானமிகு
சற்குருவைச் சார்ந்துய்யத் தற்பரனைப் பக்தியாற்
பற்றிநில் நெஞ்சே பணிந்து. 2

தேவதையைப் பூசைபண்ணிச் செய்யுநற் சித்திகளும்
ஓவலறும் யோகமுறைச் சித்திகளும் — பாவனைசெய்
மாலதனை மாய்க்கும் பரஞான மாகுமோ
சீலமுற வாய்தல் சிறப்பு. 3

தன்னை யறியார் தலைவனையுந் தானறியார்
பின்னையவர் ஞானம் பிதற்றலே — அன்னவரைச்
சாராது சற்குருவைச் சார்ந்துய்யத் தெய்வமே
பாரா யருட்கண் பதித்து. 4

தன்னை யறிந்து தனிவெளியுந் தானாகி
இன்பநிலை தேக்கி யிருப்பவரே — மன்னுதவ
ஞானகுரு அன்னவரை நம்பியருள் பெற்றக்கால்
ஈனப் பிறவி யிறும். 5

தன்னுணர்வைத் தானறிந்து சங்கற்ப மற்றுநனிப்
பின்னமிலா தென்றும் பெருவெளியில் — மன்னிமிகப்
பற்றற்று நின்று பணிபுரியும் பண்பினர்கள்
உற்றதுணை யென்றே யுணர் 6

அகத்தில் புறத்தில் அருளொளியைக் கண்டு
சுகவெளி தானுன தூயோர் — சகமயக்க
மற்ற அறிஞர்காண் நன்னெஞ்சே அன்னவரை
உற்றதுணை யென்றே யுணர். 7

மெத்தவெறும் பேச்சதனல் மெய்ஞ்ஞானம் மேவுமோ
சித்தப் பிராந்தி சிதைவுறுமோ — சித்தமதி
லுள்ளமயல் தீர வுயர்குருவை நாடிநீ
உள்ளுணர்வை யுற்றுநில் ஓர்ந்து 8

ஊள்ளுணர்வை யுற்றுணரில் ஓயாச் சுயஞ்சோதி
உள்ளமதைக் கொள்ளைகொண் டோங்கிநிற்கும் —
தெள்ளமுத
மூறியெங்கு மூடிடுமே மோனசிவம் தானெனவே
தேறி யிருத்தல் சிறப்பு. 9

## வேறு

எங்கு மிருப்ப திறையருள் பூரணம்
அங்கு தங்கிட வானது மங்களம்
பொங்கி விளைந்தது பூரண மங்களம்
எங்குந் தங்குக வெய்துமங் களமே. 10

---

## திருத்த முடியாது

நரகல் தின்னும் நாயைப் புனுகுப் பூனை இருந்த கூண்டிலே புகுதவிட்டு, மஞ்சள் நீராட்டி மதுர மணம் பூசி வைத்தாலும், புனுகுப் பூனையாக அது மாறவும் மாருது; புலன்களைக்கவரும் புனுகும் தராது. ஈனச் செயல்களை இழிவு என்று கருதாமல் பஞ்சமா பாதகத்தில் பழக்கப்பட்டு விட்ட பாபிகளை நல்லுரைகள்கூறி நல்லவனுக்க முடியாது.

## அலைபவனுக்குத் தேவை

குடை, செருப்பு, கடைசியாக கோல் — இம் மூன்றும் ஓடியாடி உழைக்கும் மனிதனுக்கு அத்தியாவசியமான பொருள்கள்.

# என் கடன் பணி!

(பண்டிதை. செல்வி: த. பூங்கொடி)

பிறர் குற்றங் காணுமளவில் இன்று நாம் உயர்ந்து விட்டோம். அவன் கடமையில் தவறுகிறான். இவன் கடமையைச் செய்யவில்லை. அரசு தன் கடமையை நிறைவேற்றத் தவறி விட்டது என்றெல்லாம் பேசுகின்றோம். இவ்வாறு கூறி எம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்பதை நாமுணர்வதில்லை. பிறர் குற்றம் கண்டுபிடிப்பதில் எம் கடமையை மறந்து விடுகின்றோம். கடமையில் தவறுபவன் கடன்பட்டவனாகின்றான். இவ்வாறு கடமையை மறந்து கடன்பட்டு வாழும் எம்மைச் சற்றுச் சிந்திக்க வைப்பார் நாவரசர், ''என்கடன் பணி'' என்று கூறி விடுகின்றார். அதாவது எனது கடமை தொண்டு செய்து வாழ்தல் ஒன்றே என்பது இதன் பொருளாகும்.

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்திற்கும் அதனதன் போக்கில் அமைந்த கடமைகள் உண்டு. அவற்றை அவை ஒதுக்கிவிட முடியாது. இறைவனுக்குங் கூடக் கடமைகள் உண்டு என்று சாதித்து விடலாம். கீதையில் ஓர் வார்த்தை,

''பார்த்திபா, மூவுலகிலும் எனக்குக் கடமைகள் ஒன்றும் கிடையாது. அடையாத ஒன்றை அடைந்தாக வேண்டும் என்பதும் இல்லவே இல்லை. ஆயினும் நான் கர்மம் செய்து கொண்டே இருக்கின்றேன்'' என்று பகவான் விளம்புகின்றார். உலக இயக்கத்திற்கு மூலகாரணமான இறைவன் தன் கிருத்தியங்களைச் சற்றுத் தளர்த்திவிடின் எல்லாம் அப்படியே நின்று விடுமன்றோ! உயிர்களைத் தாங்குகின்ற பெருங் கருணையை உடையவன் எனினும் அவற்றால் அவன் கட்டுப்படுதல் இன்று கோடானுகோடி உயிர்களின்மேல் வைத்த பெருங் கருணையே அவனைக் கடமையில் ஈடுபடுத்துகிறது. அதனால் உயிர்கள் வாழ்வதறியாது வாழ்ந்து கொண்டிருக்கின்றன,

நாம் கடமையினின்றும் விலகக் கூடாது என்பதே இறைவனின் கருணை. அதனாலேதான் அவன் எம் பொருட்டுக் கடமையிலீடுபடுகின்றான். ஆளுபவனுக்கு ஆளுந்திறமை இல்லையெனில் ஆளப்படுபவனிடத்திலும் அத்திறமையைக் காண முடியாது. இறைவன் தன் கடமையைச் செய்ய வில்லையானால், அதாவது உயிர்களைத் தாங்கவில்லையானால் உயிர்கள் தம் கடமையைத் தாமாகச் செய்ய இயலாதனவே. இதனைச் சுட்டிக் காட்டுவார் நாவரசர்.

**''தன் கடன் அடியேனையுந் தாங்குதல் என்றும், என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்றும் கூறுகின்றார்.**

இங்கே எம்மையாளும் இறைவனின் பெற்றிமையும், ஆளப்படும் உயிர்களின் இயல்பும் அழகாக அறிவுறுத்தப் படுகின்றன.

குழந்தை ஒன்று விளையாட விரும்புகின்றது. எழுந்து பொருளை எடுக்க எத்தனிக்கின்றது. அதனால் முடிவதில்லை. தாயின் உதவியை நாடி அழுகின்றது. குழந்தையின் குறிப்பு அறிந்து தாய் உதவுகிறாள். தாயின் உதவியுடன் தான் நினைத்ததைச் சாதித்து மகிழ்கின்றது குழந்தை. இது குழந்தையின் சாதனையாகின்றது..இதுபோல் வளர்ந்த மனிதனும் சாதனையில் குழந்தையாகவே இருக்கின்றான். அவன் சாதனையை நிறைவேற்றி வைப்பதில் இறைவன் தாய்போல் ஈடு இணையற்று விளங்குகின்றான். எமது நன்முயற்சிகளையே இறைவன் நிறைவு செய்கின்றான். நாம் முயற்சியற்றவர்களானால் இறைவனருளுக்கு இலக்காக முடியாது.

எம்மைச் சுற்றி எவ்வளவோ கடமைகள் உண்டு. வீட்டுக் கடமை, நாட்டுக் கடமை, சுற்றம் சூழல் சமூகம் எனக் கடமைகள் விரியும். அவற்றை நாம் நல்ல வழியில் செய்ய முயல வேண்டும். அதுவே அரும்பெருஞ் சாதனையும் கடமையுமாகும். ''தாய் பிச்சை எடுக்கத் தம்பி அறுபத்து மூவர் பூசை'' என்பது ஒரு முதுமொழி. இவ்வாறு நாம் வாழ்ந்துவிடலாகாது. பிறர் புகழுக்கும் பெருமைக்

குமாக வாழ்வது கடமையாகாது. நாம் செய்கின்ற ஒவ்வொரு கருமத்தையும் திருத்தமாகவும் புனிதமாகவும் செய்தல் வேண்டும். தியாக சிந்தையோடு செய்வதால் அது நாட்டுக்கோ வீட்டுக்கோ செய்யும் தொண்டு ஆகின்றது. சிவ நினைப்போடு செய்வதால் அது இறைபணி ஆகின்றது.

பசுவின் கன்றுக்காக மகனை முறை செய்த மனுச்சோழனும், புறாவின் உயிரைக் காக்கத் தன் தசையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும், சத்தியந் தவரூத அரிச்சந்திரனும் கடமையைக் கடவுட் பணியாகச் செய்தனர். காடு சென்று கடுந்தவமியற்றினரல்லர். உலகியலில் இருந்துகொண்டே உயர் தவம் செய்தனர். இவர்களையே வள்ளுவர் ''முயல்வாருளெல்லாந் தலை'' என்று குறிப்பிட்டார்.

துறவு நிலை நின்று முயன்று தவமிருந்து பெறும் பயனைக் கடமையின் மூலம் பெறலாம் என்கின்ருர். மீண்டும் ''அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்—புறத்தாற்றில் போஒய்ப் பெறுவது எவன்'' என்று வினவுகின்ருர். ஒருவன் அறநெறி நின்று தன் கடமைகளைச் செய்வதினிலும் மேலான தவம் இல்லை. இல்லிருந்தார் கடமையை முறைப் படுத்தித் ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்—தான் என்று ஐம்புலத்தாறு ஓம்புதல்'' என இறுதிவரை கூறினர் தொல்லாசிரியரும் ''மக்களொடு துவன்றி மனையறங்காத்து'' எனக் கடமையையும், ''சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'' என வீடு பேற்றுக் குரிய நெறியையும் கூறுகின்ருர். எனவே யாம் தொண்டு செய்வதற்கு என்று இடம் தேடி அலைய வேண்டியதில்லை. அவரவருக் கென்று இயல்பாய் அமைந்து விடும் கடமைகளை அறவழி நின்று செருக்கும் பெருமையு மற்றுச் செய்வதன்மூலம் எம்கடன் பணி செய்தவராவோம்.

உயிர்களின் தோற்றமும் நிலைபெறும், மறைவும் ஓர் உண்மையையே கூறும். பல்வேறு சமய தத்துவங்களும் ஒன்றையே கூறும். அது இறைவனை அடைதல் ஒன்றே. சைவசமயம் என்பது சிவத்தை அடையச் செய்யும் சமயம் என்று புகழப்படும். அது இறைவனை அடைதற்கு நான்கு உபாயங்களைக் கூறுகின்றது. இதனை நான்கு மார்க்கங்கள் என்றும்

கூறுவோம். அவை தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் எனப்படும். தாச மார்க்கம் இறைவனுக்குத் தொண்டு செய்து அடிமையாக, அதாவது தாசனாக வாழ்தல். இந் நெறி நின்று வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற அவர் வாக்கே இதற்குச்சான்றாகும். சற்புத்திர மார்க்கம் இறைவனைத் தந்தையாகக் கொண்டு வாழ்தல். இந்நெறியைக் கைக்கொண்டவர் ஆளுடைய பிள்ளையார். சகமார்க்கம் என்பது இறைவனைச் சமமாக அதாவது தோழனாகப் பாவித்து வாழ்தல். இதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் தம்பிரான் தோழர். மற்றது சன்மார்க்கம். இது ஞான மார்க்கம் எனப்படும். இதற்குப்பாத்திரமாக வாழ்ந்தவர் மணிவாசகராவர். இந்நெறிகளைச் சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களாகவும் கூறப்படும்.

அடியார்கள் இறைபணியல்லால் வேறு பணி அறியாதவர்கள். அவர்கள் காண்பதெல்லாம் கடவுட் காட்சியே. இயற்றுவதெல்லாம் சிவதொண்டே. கோயிலைக்கூட்டுதல், கழுவுதல், மெழுகுதல், திருநந்தவனம் அமைத்தல், பூமாலை கட்டுதல், திருவிளக்கிடுதல், இறைவன் புகழ் பாடுதல் முதலியன அவர்கள் செய்யும் சிவப்பணிகளாகும். உழவாரத் தொண்டு செய்த நாவரசரும், பூத் தொண்டு செய்த சிவகாமி ஆண்டார், திலகவதியாரும், திருவிளக்கிட்ட நமிநந்தியடிகளும் சிவபதமடைந்தனர்.

திருப்புகழ் பாடிய அருணகிரியாரும்,

''ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்''

என்று வேண்டுகின்றார். ''பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்கிறார் நாவரசர். பேய் வடிவு வேண்டுமென்று வேண்டிப் பெற்றார் காரைக் காலம்மையார். இவையெல்லாம் எதற்கு என்பதை நாம் நன்கு சிந்திக்க வேண்டும். பாடசாலைக்குச் சென்றும் கல்வியைப் பெறவில்லையானால் பாடசாலைக்குச் சென்றும் செல்லாதவராவோம். இதுபோல் பெறுதற்கரிய பிறவியை எடுத்தும் அதன் பயனை அடையவில்லையானால் பிறந்தும் பிறவாதவர்களாவோம். மற்றைய பிறவிகட்கு இல்லாத தனிச் சிறப்பை உடையது மானிடப் பிறவி அதன் அமைப்பு ஒவ்வொன்றும் இறைபணிக்கென்றே ஆண்டவனால் அருளப் பட்டது ஆதலால் இவ்வுடலாலும் உள்ளத்தாலும் எம் கடன் பணி செய்வோமாக!

# கலியுக வாழ்க்கை

(மாத்தளை - அருணேசர்)

கலியுகம் பிறந்தால் உலக நடப்புகள் - மனிதர்களின் வாழ்க்கைப் போக்குகள் எல்லாம் மாருக நடக்கும் என்று மகாபாரதத்தில் விளக்கப்பட்டுள்ளது.

கலியுகம் பிறக்கத் தொடங்கிய பின்னும், இடையிலும் இறுதியிலும் அநீதிகள் - அக்கிரமங்கள் பலவிதமாகப் பெருகி மக்கள் துன்புறுவர் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

நான்கு யுகங்களில் கலியுகம் என்பது நாலாவதாக உள்ளது. இக்கலியுகம் நடைபெறுங்காலம் 432000 ஆண்டுகள் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி கலியுகம் பிறந்து இப்போது 5072 ஆண்டுகள் முடிந்துள்ளன. கலியுகம் தொடங்கிய காலம் கி மு. 3100 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அப்போதுதான் பாரதப் போர் முடிந்தது; துவாபர யுகமும் முடிவடைந்தது. பாரதப் போர் தொடங்குமுன் பாண்டவர்களுக்கும்துரியோதனுதியோர்களுக்கும்உள்ள பாகப் பிரிவினை பற்றிப் பேசுதற்கு விதுரர் திருதராட்டிரனிடம் போய் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

அச்சமயத்தில் நடந்த பேச்சுகளின்போது விதுரர், கலியுகம் பிறக்கப் போவதைப் பற்றியும் அதில் நடக்கப் போகும் தீமைகளைப் பற்றியும் மார்க்கண்டேயரால் தமக்குக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களையும் எடுத்துக் கூறினுர்.

அக்கால யோகிகள், ஞானிகள் பலர் முக்காலமும் உணர்ந்த தீர்க்கதரிசிகளாயிருந்தார்கள். அவர்கள் கலியுகத்தில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை கண்ணுடியில் காட்டுவது போல அக்காலத்திலேயே தெளிவாய் எடுத்துரைத்துள்ளார்கள். அதன்படியே இப்போது நடந்துவருவதைக் கொண்டு அவர்களின் தீர்க்கதரிசனத்தின் பெருமையை அறியலாம்.

விதுரருக்கு மார்க்கண்டேயர் உரைத்ததாக வரும் விபரங்கள் பின்வருமாறு:—

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என உள்ள நான்கு யுகங்களில் கிரேதாயுகத்தில் எல்லாரும் வஞ்சனையற்றிருந்தார்கள். உலோபமும் பொறாமையும் இருக்கவில்லை. அப்போது பசுவடிவமான தர்மதேவதை நாலு பாதங்களில் நடந்தது

திரேதாயுகத்தில் பாபம் தோன்றித் தருமதேவதையின் ஒரு காலை முறித்துவிட்டது. ஆகையால் அப்போது அது மூன்று பாதங்களால் நடந்தது.

துவாபர யுகத்தில் பாபம் அரைப்பங்கும் புண்ணியம் அரைப்பங்குமாய் இருந்தது.

கலியுகத்தில் பாபம் தர்மத்தின்மூன்று பங்கை விழுங்கி விடும். ஆகையால் கால்பங்கு தர்மந்தான் மனிதரிடத்தில் இருக்கும். மனிதருடைய ஆயுள், பலம், சரீரம், சக்தி, அறிவு இவைகள் யுகத்துக்கு யுகம் குறையும்.

வலக்கை இடக்கையை மோசம் செய்யும். நாலு வருணத்தாரும் வஞ்சனையாகவே தருமம் செய்வார்கள். தருமம் செய்ய விரும்புகிறவர்களை வஞ்சகர்கள் வஞ்சகமான தர்ம வலைக்குள் சிக்குப்படுத்துவார்கள்.

அப்போது மனிதர்கள் எல்லாரும் பொய்யராயிருப்பார்கள். பிறகு, உபதேசகிரமத்தில் சீர்திருத்தப் பட்டு நான்கு வருணங்களும் கொஞ்சகாலம் கிரமமாய் நடக்கும். யாகங்களையும் தானங்களையும் செய்வார்கள். விரதாநுஷ்டானங்களையும் செய்வார்கள்.

பிராமணர்கள் சூத்திரர் நடக்கவேண்டிய விதிகளை ஏற்படுத்துவார்கள். ஆயினும் சூத்திரர்கள் ஐசுவரியம் சம்பாதிக்கத் தொடங்குவார்கள். க்ஷத்திரியர்களும் பிராமண தர்மங்களைக் கொள்வார்கள். பின் பிராமணர்கள் வேதத்தையும் யாகத்தையும் விடுவார்கள். தண்டத்தையும் மான் தோலையும் ஒழிப்பார்கள்.

எல்லாவற்றையும் புசிப்பார்கள். ஜபம் செய்யாமல் விட்டுவிடுவார்கள். அவற்றைச் சூத்திரர்கள் கைகொள்ளுவார்கள். நாளடைவில் உலகநடை மாறிப்போகும்.

—வளரும்

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 13 | திருநீற்றின் பெருமை | .10 |
| 14 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 15 | பக்தி | .20 |
| 16 | பௌத்தம் | .20 |
| 17 | பிரமம் | .20 |
| 18 | அவதாரம் | .20 |
| 19 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 4-10 | 2.50 |
| 20 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 21 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 22 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300.

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இறைவன் திருவருளினாலும்,
மகான்களின் நல்லாசியினாலும்,
பக்தர்களின் நல்லெண்ணத்தினாலும்
சென்ற மாதத்துடன் ஆத்மஜோதிக்கு 25-ஆவது ஆண்டு ஆரம்பமாகியது என்பதை மிக மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரிய காலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதியின் வெள்ளி விழாவை முன்னிட்டு பெரிய அளவில் மலர் ஒன்றும் தயாராகிக்கொண்டு இருக்கிறது என்ற சந்தோஷச் செய்தியை அன்பர்களுக்கு அறியச் செய்வதில் மகிழ்வு கொள்ளுகின்றோம்.

**மலரின் விலை ரூபா 5-00**

முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்!

## ஆத்மஜோதி நிலையம்,
## நாவலப்பிட்டி (இலங்கை).

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 14-1-73.